## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

எண்.146/2024 நாள்: 12.12.2024

### செய்திக் குறிப்பு

### ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள்–II (தொகுதி–II மற்றும் IIA பணிகள்) தேர்வு முடிவுகள் வெளியீடு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு–II (தொகுதி–II மற்றும் IIA பணிகள்)–இல் அடங்கிய பதவிகளின் நேரடி நியமனத்திற்கான அறிவிக்கை 20.06.2024 அன்று தேர்வாணைய வலைதளத்தில் வெளியிட்டது. இத்தெரிவிற்கான முதல்நிலை எழுத்துத் தேர்வு 14.09.2024 அன்று முற்பகல், 38 மாவட்ட மையங்களில் நடைபெற்றது. இத்தேர்விற்கு அனுமதிக்கப்பட்ட 7,93,966 தேர்வர்களில் 5,83,467 தேர்வர்கள் தேர்வு எழுதினர்.

இத்தெரிவிற்கான தொகுதி–II மற்றும் IIA பணிகளுக்கான அறிவிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட விகிதாச்சாரத்தில், முதன்மை எழுத்துத் தேர்வுகளுக்குத் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பதிவெண் கொண்ட பட்டியல்கள், தேர்வாணைய வலைதளத்தில் (www.tnpscresults.tn.gov.in) 12.12.2024 அன்று வெளியிடபட்டுள்ளன.

| வ. எண் | பணியின் பெயர் | காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை | பட்டியலிலுள்ள தேர்வர்களின் எண்ணிக்கை | முதன்மை எழுத்துத் தேர்வு நடைபெறும் நாட்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | தாள்–I | தாள்–II |
| 1. | (தொகுதி II பணிகள்) | 534 | 7,987 | 02.02.2025 மு.ப. (விரிந்துரைக்கும் வகை) | 23.02.2025 மு.ப (விரிந்துரைக்கும் வகை) |
| 2. | (தொகுதி IIA பணிகள்) | 2,006 | 21,822 | | 08.02.2025 பி.ப. (கொள்குறி வகை) |

மேலும், தொகுதி–II மற்றும் IIA பணிகளுக்கான இரண்டு முதன்மை எழுத்துத் தேர்வுகளுக்கும் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டுள்ள தேர்வர்கள் முதன்மை எழுத்துத் தேர்விற்கான கட்டணம் ரூ.150/– வீதம் இரண்டு முதன்மை எழுத்துத் தேர்வுகளுக்கான தேர்வுக்கட்டணத்தை தங்களது ஒருமுறைப் பதிவின் (One Time Registration ID) மூலமாக மேற்படி பட்டியல்களில் குறிப்பிட்டுள்ள கடைசி தேதிக்குள் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்